DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -92/2025

Prosecution PW -2

| | | |
|---|---|---|
| Name | Gokulakannan | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 26-11-2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused absent. 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் தற்போது பேரளம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 21.07.2013 ஆம் தேதி நான் மன்னார்குடி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 8.30 மணிக்கு இரகசிய தகவலாளி போன் மூலம் கூறிய தகலை பெற்று, பொது நாட்குறிப்பில் பதிவு செய்து, காவல் துணை கண்காணிப்பாளருக்கு மற்றும் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்து அனுமதி பெற்றேன். பின்னர், நிலையத்தில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வம், காவலர் கரிகாலன் ஆகியோரை கஞ்சா வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் அரசு ஜீப்பில் கோரிமேடு, ஆற்றங்கரை அருகில் சென்று கண்காணித்தபோது, போலிசாராகிய எங்களை பார்த்ததும்தப்பி ஓட எத்தனித்தார், மடக்கி பிடித்து விசாரித்தோம். அவர் தன் பெயர் முருகன் என்று தன் விலாசத்துடன் கூறினார். மேற்படி நபரிடம் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக நம்ப தகுந்த தகவல் வந்துள்ளது என்றும், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்று சொன்னேன். அவ்வாறு சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சோதனை நமுனா சார்வு செய்தேன். அதற்கு அவர் அவ்வாறு அழைத்து செல்ல தேவையில்லை, நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அதை நான் எழுத்து மூலம் எழுதி அந்த நபரிடம் கையெழுத்து வாங்கினேன். அந்த சோதனை நமுனா அ.தசா.ஆ-3. ஆஜர் எதிரி தான் அந்த நபர். பின்னர், எதிரி வைத்திருந்த பையை சோதனை செய்தபோது, விதை இலையுடன் கூடிய பொருள் இருந்தது. அதை சிறிதளவு எடுத்து முகர்ந்து பார்க்க கஞ்சா வாடை வீசியது. அந்த கஞ்சாவை வைத்திருக்க எதிரிக்கு அனுமதியோ உரிமையோ இல்லை என்று காரணம் கூறி கைது செய்தேன். எதிரியை கைது செய்தேன். எதிரி வைத்திருந்த கஞ்சாவை நாங்கள் எடுத்து சென்ற Electronic தராசில் எடை போட்டு பார்க்க 1.100 கிலோ இருந்தது. அதில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து

பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தோம். பின்னர், சாட்சிகளிடமும் எதிரியிடமும் கையொப்பம் வாங்கினேன், நானும் கையொப்பம் செய்தேன். மீதம் உள்ள 1.000 கிலோ கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தேன். பின்னர், எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன். நானும் கையொப்பம் செய்தேன். மாதிரி கஞ்சாவையும் மீதம் உள்ள கஞ்சாவையும் கைப்பற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகசர் தான் என்னிடம் காட்டப்படுவது. அது அ.த.சாஆ-1 ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டது. பின்னர் 10.30 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 763/2013, பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ**.**த**.**சா**.**ஆ**-4**. பின்னர் 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வம், கரிகாலன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ-2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது. மாதிரி வரைபடம் அ**.**த**.**சா**.**ஆ**-5.** பின்னர் சாட்சிகள் செல்வம், கரிகாலன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பணிமாறுதலாகி விட்டதால் பின்னால் வந்த ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

சம்பவ இடம் மக்கள் நடமாடும் பகுதி என்றால்அதிகமாக நடமாடும் பகுதி ஆகும். மேல் அதிகாரிகளிடம முன்அனுமதி கடிதம் எழுத்துமூலமாக பெறப்படவில்லை என்றால்சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றுதல் மகசர், சோதனை அறிவிப்பு நான்தான் எழுதினேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால்சரிதான். கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண், சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் தடயப்பொருள் 21.07.2013 ஆம் தேதி கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் நீதிமன்றத்திற்கு 17.02.2025 அனுப்பப்பட்டதுஎன்றால் சரிதான். நீதிமன்றத்தில தாக்கல் செய்யப்பட்டுள்ள சோதனை அறிவிப்பு நமுனா நான் எழுதவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.
(ஒ/ம்-G.சுந்தரராஜன்,B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்